# 2022 ஆம் ஆண்டு மே மற்றும் ஜுலை மாதங்களில் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகால ஒழுங்குவிதிகள்

ஜுலை 2022, 17 ஆம் திகதி அன்று, அப்போது பதில் ஜனாதிபதியாக இருந்த திரு. ரணில் விக்கிரமசிங்க அவர்கள், அதிவிசேட வர்த்தமானி இல. 2288/30 மூலம், ஜுலை 18, 2022 திகதியிலிருந்து ஓர் அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்தியிருந்தார். அதன் பின்னர், ஜுலை 2022, 18 ஆம் திகதியன்று, அதிவிசேட வர்த்தமானி இல. 2289/07 மூலம், அவசரகால (நானாவித ஏற்பாடுகள் மற்றும் தத்துவங்கள்) ஒழுங்கு விதிகளை அவர் நடைமுறைக்கு கொண்டு வந்தார். இந்தச் சட்டங்கள், முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச மே 2022 இல் நடைமுறைக்குக் கொண்டு வந்த இதே பெயரிலான ஒழுங்குவிதிகளுக்கு அடிப்படையில் ஒத்தவையாக இருந்தன. இருந்தபோதிலும், தற்போது பதவியிலுள்ள ஜனாதிபதியின் ஒழுங்குவிதியில் மேற்கொள்ளப்பட்ட இரண்டு சிறிய மாற்றங்கள் அதனை கூடுதல் கொடுங்கோல் தன்மை கொண்டவையாக ஆக்கின; ஒழுங்குவிதி 12 இன் கீழான குற்றங்களின் பட்டியலிற்கு தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவுகள் 408-426 சேர்க்கப்பட்டதுடன், ஒழுங்குவிதி 17(2) இன் கீழ் நீதவான் ஒருவர் முன்பாக முன்னிலைப்படுத்தப்படுவதற்கு முன் சந்தேகநபரொருவர் தடுத்து வைத்திருக்கப்படக்கூடிய காலம் 24 மணித்தியாலங்களிலிருந்து, 72 மணித்தியாலங்களுக்கு நீடிக்கப்பட்டது.

அரசியலமைப்பின் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்ட உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் மீது 2022 ஆம் ஆண்டின் அவசரகால (நானாவித ஏற்பாடுகள் மற்றும் தத்துவங்கள்) ஒழுங்குவிதி இல.1 கொண்டிருக்கக் கூடியதான தாக்கத்தைத் தீர்மானிப்பதற்கு இந்த ஆவணம் இவ்வொழுங்குவிதியின் சில அம்சங்களை ஆராய்கிறது. இந்த நோக்கத்திற்காக;

1) தேடுகை, கைது மற்றும் தடுத்து வைத்தல்,
2) குற்றங்கள் (புதிய குற்றங்கள் உட்பட),
3) அத்தியாவசிய சேவைகள்,
4) புலனாய்வுகள், மற்றும் சட்டமா அதிபரின் தத்துவங்கள்,

என்பவை தொடர்பாக அவசரகால ஒழுங்குவிதிகளை இவ்வாவணம் ஆராய்கிறது.

நெருக்கடியான சமயங்களில் கூட, அதிகாரங்கள் அல்லது தத்துவங்கள் நியாயமான வகையிலும் மற்றும் விகிதாசாரளவிலும் அப்பியாசிக்கப்படல் வேண்டும் என்பதுடன், இந்த ஒழுங்குவிதிகளின் அளவுக்கு மிஞ்சிய மற்றும் நியாயமற்ற அப்பியாசித்தல் தற்போது நிலவும் அடக்குமுறை நிலைமையை மேலும் பலப்படுத்தும் ஆற்றல் கொண்டவை என்பது இங்கு வலியுறுத்தப்படுதல் வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ச, 5 வாரங்களில் இரண்டாவது தடவையாகவும், அவரது ஜனாதிபதித்துவத்தின் போது மூன்றாவது தடவையாகவும், 2022, மே 6 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் ஓர் அவசரகால நிலைமையை அறிவித்திருந்தார். 2022, ஏப்பிரல் 1ஆம் திகதியன்று அவரினால் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகால நிலைமை, அதன் கீழ் அவசரகால ஒழுங்குவிதிகள் எதுவும் பிறப்பிக்கப்படாது ஏப்பிரல் 5 ஆம் திகதியன்று நீக்கப்பட்டது. எவ்வாறாயினும், மே 6 ஆம் திகதியன்றான

அவசரகாலப் பிரகடனத்தைத் தொடர்ந்து, அதிவிசேட வர்த்தமானி இல. 2278/23 மூலம், ஜனாதிபதி கோட்டாபாய, 2022 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க அவசரகால (நானாவித ஏற்பாடுகள் மற்றும் தத்துவங்கள்) ஒழுங்குவிதிகளை நடைமுறைக்கு கொண்டு வந்தார்.

அவசரகால நிலைமைப் பிரகடனத்துடன் பொது மக்கள் ஆர்ப்பாட்டங்கள் முடிவுக்கு வருதல் வேண்டுமென ஊகங்கள் அங்கே இருந்த போதிலும், இருக்கும் சட்டங்கள் மற்றும் அரசியலமைப்பினால் உத்தரவாதமளிக்கப்பட்ட உரிமைகளில் ஓர் அவசரகாலப் பிரகடனம் எந்த விதத் தாக்கத்தையும் கொண்டிராததினால், அவ்வூகங்கள் தவறானவையாகின. அவசரகாலப் பிரகடனம், எந்தச் சட்டத்தையும் மேலுறுவதற்கு அவசரகால ஒழுங்குவிதிகளை ஜனாதிபதி பிரகடனப்படுத்துவதற்கு அனுமதிக்கின்றது, எனினும் அரசியலமைப்பினை மேலுறுவதற்கு அதனால் முடியாது. எவ்வாறாயினும், அரசியலமைப்பில் உத்தரவாதமளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் சிலவற்றை ஒழுங்குவிதிகள் மேலுறுவதற்கு (அரசியலமைப்பின் உறுப்புரை 15 (7) பிரகாரம்) மட்டுப்படுத்தப்பட்ட வகையில் அங்கே சில இடங்கள் உள்ளன. சமீபத்தைய அவசரகால ஒழுங்குவிதிகளில் உள்ளடங்கியுள்ள சில ஒழுங்குவிதிகள் ஆர்ப்பாட்டம் செய்வதற்கான உரிமை, மற்றும் சுதந்திரமாய் மாற்றுக் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கான சுதந்திரங்களை அடக்கியொடுக்கும் பயன்களைக் கொண்டிருக்கலாம்.

எனினும், அடிப்படை உரிமைகளுக்கான ஒரு மனு மூலம் ஒழுங்குவிதிகள் சவாலுக்கு உட்படுத்தப்பட முடியும். ஒழுங்குவிதிகள் நியாயமான தன்மை மற்றும் விகிதாசாரத் தன்மை என்பவற்றின் தராதரங்களைத் திருப்தி செய்தல் வேண்டுமென நீதிமன்றங்கள் முன்னர் தீர்மானித்துள்ளன. மேலும், 14 நாட்களினுள் பாராளுமன்றத்தினால் அவை அனுமதிக்கப்பட்டாலன்றி (அரசியலமைப்பின் உறுப்புரை 155(6)) இந்த ஒழுங்குவிதிகள் காலாவதியாகிவிடும். அவசரகாலப் பிரகடனம் கூட 14 நாட்களிற்குள் பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்படல் வேண்டும் அன்றேல் அது காலாவதியாகிவிடும். ஏப்பிரல் 1 ஆம் திகதியிலிருந்தான முன்னைய பிரகடனம் அது பிறப்பிக்கப்பட்ட உடன் பின்னதாகவே இரத்துச் செய்யப்பட்டதுடன் பாராளுமன்றத்தின் முன் பரீசிலிக்கப்படவில்லை, ஆனாலும், அதற்கிடையில், அந்தவோர் அவசரகால நிலைமைப் பிரகடனத்தின் சட்டபூர்வ தன்மையை சவாலுக்குட்படுத்தி, தாக்கல் செய்யப்பட்ட பல்வேறு அடிப்படை உரிமைகள் மனுக்களை மேற்கொண்டு விசாரிப்பதற்கு உயர் நீதிமன்றம் ஏப்பிரல் 7, 2022 அன்று அனுமதியளித்தது. மே 6, 2022 திகதியின் அவசரகாலப் பிரகடனம், மற்றும் அதைத் தொடர்ந்த அவசரகால ஒழுங்குவிதிகள் என்பவற்றைச் சவாலுக்குட்படுத்தி ஜூன் 6, 2022 அன்று உயர் நீதிமன்றத்தில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மனுவொன்றைத் தாக்கல் செய்தது. இலங்கை பல மாதங்களாக ஒரு பொருளாதார நெருக்கடி நிலைமைக்கு முகங் கொடுத்துக் கொண்டிருந்த வேளையில், ஜனாதிபதிகளால் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்ட எந்த சந்தர்ப்பங்களுமே அவ்வாறானதொரு பிரகடனத்தை தேவைப்படுத்தியிருக்கவில்லை. ஆகஸ்ட் 2021 இல், உணவுப் பற்றாக்குறை முதன் முதலாக எழுவதற்கு ஆரம்பித்த போது அவசரகாலம் பிறப்பிக்கப்பட்டது. அவ்வேளையில், பிரகடனம் மற்றும் அது ஏன் அநாவசியமானது மற்றும் அதிகப்படியானது பற்றிய தெளிவுபடுத்தல்கள் தொடர்பாக மா.கொ.நி கருத்துத் தெரிவித்தது. ஜனாதிபதிக்கு எதிராக பெரும் மக்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட இருந்த வேளையில், பொதுமக்களிற்கான ஏதேனும் நன்மையை விட, தனது சொந்தப் பாதுகாப்புக்காக, ஏப்பிரல் 2022 இல் அவசரகால நிலைமை பிறப்பிக்கப்பட்டது.

தற்போது பதவியிலுள்ள ஜனாதிபதி கூட தேசிய ரீதியில் அல்லது பொதுப் பாதுகாப்புக்கு ஓர் அச்சுறுத்தலில்லாத, ஆனால் இதைப் போன்ற காரணங்களுக்காக அவசரகால நிலைமையைப் பிரகடனப் படுத்தியிருப்பதாகத் தெரிகிறது. அதனால், ஏற்கனவே அதிகாரம் மிக்க நிறைவேற்று முறைக்கு மேலும் கூடுதல் அதிகாரங்களை அளிப்பதின் மூலம், இந்த ஜனாதிபதியும் மற்றும் முன்னாள் ஜனாதிபதியும் அவசரகால அதிகாரங்களைத் துஷ்பிரயோகிக்கும் ஒரு மாதிரியைக் காண்பித்தனர்.

## தேடுகை, கைது மற்றும் தடுத்து வைத்தல்

ஒழுங்குவிதி 11 –

இந்த ஒழுங்குவிதி பொலிஸ் மற்றும் ஆயுதம் தாங்கிய படையினருக்கு பல்வேறு குறிப்பிட்ட தவறுதல்கள் தொடர்பாக தேடுகை மேற்கொள்தல் மற்றும் கைது செய்தல் தொடர்பில் அளவற்ற அதிகாரங்களை அளிக்கின்றது. உறுப்புரையின் பிரகாரம்; எவரேனும் பொலிஸ் உத்தியோகத்தர் அல்லது ஆயுதம் தாங்கிய படைகளின் எவரேனும் உறுப்பினருக்கு பின்வருபவற்றை மேற்கொள்வதற்கு முடியும்;

1. தேடுகை
2. தேடுதல் நோக்கத்திற்காகத் தடுத்து வைத்தல்; அல்லது
3. கைது செய்தல்

எவரேனும் நபர்;

1. தவறைப் புரிந்துகொண்டிருக்கின்ற;
2. தவறைப் புரிந்திருக்கின்ற;
3. அல்லது தண்டனைச் சட்டக் கோவையின் பின்வரும் தவறுகள் ஏதேனிலும் சம்பந்தப்பட்டிருக்கின்ற அல்லது புரிந்திருப்பதாக நம்புவதற்கு நியாயமான ஏதுநிலைகளை அவர்கள் கொண்டுள்ளனர்;

| **பிரிவு** | |
|---|---|
| 345 | பாலியல் தொல்லைப்படுத்தல் |
| 354 | ஆட்கடத்தல் |
| 355 | கொலை செய்யும் பொருட்டு ஆட்கடத்துதல் அல்லது கடத்துதல் |
| 356 | ஆளொருவரை கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் இரகசியமாகவும் மற்றும் தவறான முறையிலும் ஆட்கடத்துதல் அல்லது கடத்துதல் |
| 357 | திருமணத்திற்கு கட்டாயப்படுத்துவதற்கு பெண்ணொருவரை ஆட்கடத்துதல் அல்லது கடத்துதல் |
| 358 | கடுமையாக ஊறுபடுத்துதல், அடிமைத்தனத்திற்கு உள்ளாகும் முகமாக ஆளொருவரை ஆட்கடத்துதல் அல்லது கடத்துதல் |
| 359 | ஆட்கடத்தப்பட்ட நபரொருவரை தவறான வகையில் மறைத்து வைத்தல் அல்லது சிறைப்படுத்தி வைத்தல் |
| 360 | பத்து வயதிற்கு உட்பட்ட ஒரு சிறுவரை, அச்சிறுவர் வசமிருந்து அசையும் சொத்தைத் திருடும் நோக்கத்துடன் ஆட்கடத்துதல் அல்லது கடத்துதல் |
| 360 அ | கருத்தரிக்க வைத்தல் (விபச்சாரம் அல்லது பாலியல் புணர்தலிற்காக) |
| 360 ஆ | சிறுவர்களைப் பாலியல் ரீதியாகச் சுரண்டுதல் |
| 360 இ | சட்டவிரோத ஆட்கடத்தல் |
| 364 | பாலியல் வல்லுறவு |
| 365 | இயற்கை விதிகளுக்கு மாறான குற்றங்கள் அல்லது தவறுதல்கள் (உடல் ரீதியான பாலுறவு) |
| 365 அ | ஆட்களுக்கிடையில் முற்றிலும் கண்ணியமில்லாச் செயற்பாடுகள் (ஒரே பாலினம் சார்ந்த ஆட்களுக்கிடையிலான பாலியல் செயற்பாடுகளை குற்றப்படுத்துவதற்கு உபயோகிக்கப்பட்ட தவறுகை) |
| 365 இ | பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் |
| 427 | குற்றவியல் அத்துமீறல் |
| 428 | அத்துமீறி வீடு புகுதல் |
| 429 | மறைந்திருந்து வீடு அத்துமீறுதல் |
| 430 | மறைந்திருந்து இரவில் வீடு அத்துமீறுதல் |
| 431 | வீடு உடைத்தல் |
| 432 | இரவில் வீடு உடைத்தல் |
| 433 - 446 | அவை புரியப்பட்ட நோக்கம், நேரம் போன்றவற்றின் அடிப்படையில் அமைந்த வேறுபட்ட வகைகளான அத்துமீறல், மற்றும் வீடு உடைத்தல் |

பட்டியலிலுள்ள சில தவறுதல்கள், விசேடமாக பாலியல் தவறுதல்கள், ஏதேனும் உடனடியான அமைதியின்மைக்கு தொடர்பு கொண்டுள்ளதா, மற்றும் இந்த ஒழுங்குவிதிகளில் அவை ஏன் உள்ளிணைக்கப்பட்டுள்ளன என்பது தெளிவற்றதாக உள்ளது. கடந்த காலங்களில் LGBTQIA சமூகத்தை மிரட்டுவதற்கும் மற்றும் தொல்லைப்படுத்துவதற்கும் உபயோகிக்கப்பட்ட பிரிவுகள் 365 மற்றும் 365 'அ' என்பன பட்டியலில் உள்ளிணைக்கப்பட்டமை, விசேடமாக கரிசனைக்குரியதாக உள்ளது.

ஒரு பொலிஸ் உத்தியோகத்தரால் கைது மேற்கொள்ளப்படும் போது, கைது செய்யப்பட்ட நபர் அண்மித்த பொலிஸ் நிலையத்திற்கு கூட்டிச் செல்லப்படுதல் வேண்டும் (ஒழுங்குவிதி. 11 (3)). எனினும், ஆயுதப் படை உறுப்பினரொருவரால் கைது மேற்கொள்ளப்படுகையில், கைது செய்யப்பட்ட நபர், கைது நிகழ்ந்த 24 மணித்தியாலங்களுக்குள் அண்மித்த பொலிஸ் நிலையத்திற்கு கையளிக்கப்படல் மட்டுமே தேவையாகிறது (ஒழுங்குவிதி. 11 (2)). கைது செய்யப்பட்ட நபர் அறிவிக்கப்படாத ஓரிடத்தில் ஒரு நாள் வரை ஆயுதப்படையினரால் கட்டுக் காவலில் வைத்திருக்கப்பட முடியுமென்பதையே இது அர்த்தப்படுத்துகிறது.

இது, ஒழுங்குவிதி. 11 (6) இனால் மேலும் மோசமாக்கப்படுவதுடன், கைது செய்யும் உத்தியோகத்தர் 24 மணித்தியாலங்களிற்குள் கைதினை மாத்திரம் அறிவித்தல் வேண்டுமென (ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் பிரதேசத்திலுள்ள பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கும் மற்றும் ஒரு ஆயுதப் படை உத்தியோகத்தர் கைது மேற்கொள்ளப்பட்ட பிரதேசத்திலுள்ள கட்டளையிடும் அதிகாரிக்கும்) அவ்விதி தெரிவிக்கிறது. கைது செய்யப்பட்ட ஒரு நபர் 24 மணித்தியாலங்களுக்கு பாதுகாப்பைக் கொண்டிருக்கமாட்டார் என்பதையே இந்த உறுப்புரைகளின் ஒரு சேர்க்கை அர்த்தப்படுத்துகிறதுடன், அவரின் குடும்பங்கள் அல்லது சட்டத்தரணிகள் கூட குறித்த அந்தக் காலத்திற்குள் அவர் எங்கே உள்ளார் அல்லது அணுகுவதற்கு வழி உள்ளதா என்பது பற்றித் தெரியாதிருக்கலாம்.

ஒரு பொலிஸ்/ஆயுதப்படை உத்தியோகத்தர் தேடுகையை மேற்கொள்ளும் போது, தேடுகையின் நோக்கத்திற்கு சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக தேடப்படும் நபர் அல்லது சம்பவ இடத்தில் அல்லது வாகனத்தில் பிரசன்னமாக இருந்த வேறு எவரேனும் நபர் பற்றியும் கேள்வி கேட்பதற்கு முடியும் (ஒழுங்குவிதி. 11(4)), மற்றும் அவ்வாறு கேள்விக்குட்படுத்தப்படும் நபர் அவரது அறிவுக்கு எட்டிய வகையில் கேட்கப்படும் விடயம் தொடர்பான தகவல்களை அளிப்பதற்கும் பிணிக்கப்பட்டுள்ளார் (ஒழுங்கு விதி.11(5)). தேடப்படும் ஒரு நபர் பெண்ணாக இருந்தால், அவர் ஒரு பெண் உத்தியோகத்தரால் மட்டுமே தேடுகைப்படுத்தப்பட முடியும் (ஒழுங்குவிதி. 11(8)).

இந்த ஒழுங்குவிதியின் கீழ், தேடுதலை மேற்கொள்ளும் ஒரு பொலிஸ்/ஆயுதப்படை உத்தியோகத்தர் அவர் தேடுவதற்கு நாடும் இடம் அல்லது வாகனத்தின் உள்ளே நுழைவதற்கு, அவற்றின் ஏதேனும் உட்புற அல்லது வெளிப்புறக் கதவு அல்லது யன்னலை உடைத்துத் திறப்பதற்கும் கூட அனுமதிக்கப்படும் வேளையில், இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகளின் கீழ் ஏதேனும் ஆதனத்தைக் கைப்பற்றுவதற்கோ அல்லது அதனைத் தடுத்து வைப்பதற்கும் முடியும், அவ்வாறான ஆதனத்தின் பாதுகாப்புப் பொறுப்பைக் கொண்டிருந்த நபரிற்கு கைப்பற்றப்பட்டமை அல்லது தடுத்து வைக்கப்பட்டமை தொடர்பாக ஒரு பற்றுச்சீட்டு வழங்கப்படுதல் வேண்டும் (ஒழுங்குவிதி. 11(10)).

தேடுகை மற்றும் கைது தொடர்பான கருமங்களை ஒழுங்குவிதி 11 கருதும் பொழுது, உப ஒழுங்குவிதிகள் (11) மற்றும் (12) என்பன இந்த நோக்கெல்லைக்கு அப்பாற் செல்லும் அதிகாரங்களை

வழங்குகின்றன. உப ஒழுங்குவிதி 11(11), ஜனாதிபதி, அவர் குறித்துரைக்கும் ஏதேனும் விதிவிலக்குகளுடன், நாட்டின் ஏதேனும் பகுதியில் இடம்பெறும் ஏதேனும் பொது ஊர்வலம் அல்லது கூட்டத்தைத் தடுப்பதற்கு கட்டளைகளை ஆக்குவதற்கான அதிகாரத்தை அவரிற்கு அளிக்கிறது. உப ஒழுங்குவிதி 11(12), இலங்கையின் ஏதேனும் ஒரு பகுதி தொடர்பில் அப்பகுதிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் அனுமதியுடன் அன்றேல், குறித்துரைக்கப்பட்டவொரு நேரத்தில், ஏதேனும் பொது இடத்தில், ஆளெவரொருவரும் இருத்தலாகாது எனவொரு கட்டளையை ஆக்குவதற்கான அதிகாரத்தை பொலிஸ் தலைமையதிபதிக்கு அனுமதிக்கிறது.

கைது செய்யப்பட்ட ஆளொருவர் தடுத்து வைக்கப்படுவதற்கான நடைமுறை ஒழுங்குவிதி 17 இல் காணப்படுகிறது. இவ்வொழுங்கு விதிகளின் கீழ் கைது செய்யப்பட்ட ஆளொருவர், ஒரு பிரதிப் பொலிஸ் மா அதிபரினால் வழங்கப்பட்ட ஒரு கட்டளையின் நியதிகளிற்கமைய புலனாய்வு நோக்கத்திற்காகத் தடுத்து வைக்கப்படலாம், அதற்கான கட்டளை, இரண்டு வாரங்கள் வரையான ஒரு காலப்பகுதிக்கு, தடுத்து வைக்கப்படுதலுக்கான நிபந்தனைகளைக் குறிப்பிடுதல் வேண்டும் (ஒழுங்குவிதி. 17(1)).

ஒழுங்குவிதி 17(2), கைது செய்யப்பட்ட ஆளொருவர் இயன்றளவு விரைவாக பொலிஸ் நிலையமொன்றுக்கு கொண்டு வரப்பட்டு, அங்கு 72 மணித்தியாலங்கள் வரை தடுத்து வைத்திருக்கப்பட முடியும் எனவும், அதன் பின் அவ்வொழுங்குவிதிகளின் நியதிகளின் படி ‘பிரதிப் பொலிஸ் மா அதிபரினால் மேலும் தடுத்து வைத்திருக்கப்பட கட்டளையொன்று ஆக்கப்பட்டாலன்றி’, கைது செய்யப்பட்டவர் ஒரு நீதவான் முன் முன்னிலைப்படுத்தப்படல் வேண்டுமென, ஏற்பாடளிக்கின்றது. ஜனாதிபதி ராஜபக்சவின் கீழான ஒழுங்கு விதிகளில், அவ்வாறான தடுத்து வைக்கப்படல் 24 மணித்தியாலங்கள் வரை மட்டுமே அனுமதிக்கப் பட்டிருந்தது, எனினும், ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் கீழான ஒழுங்குவிதிகளில், இந்தத் தடுத்து வைத்திருக்கப்படும் காலம் 72 மணித்தியாலங்கள் வரைக்கும் நீடிக்கப்பட்டது.

மேலும், தடுத்து வைத்திருக்கப்படுவதற்கான கட்டளை “அவ்வொழுங்குவிதிகளின் நியதிகளின்படி பிரதிப் பொலிஸ் மா அதிபர்” ஒருவரினால் வழங்கப்பட்டிருப்பின் ஆளொருவர் ஒரு நீதிமன்றத்தின் முன் முன்னிலைப்படுத்தப்படுவதற்கு முன்பாக இரண்டு வாரங்கள் வரை தடுத்து வைத்திருக்கப்பட முடியும். இந்த ஏற்பாடு பயங்கரவாத தடுப்புச் சட்டத்தில் உள்ள தடுத்து வைத்தல் ஏற்பாடுகளை விடக் கூடுதல் கடுமையானவை.

எவ்வாறாயினும், தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆளொருவரின் குடும்பத்தினர் அவரைத் தொடர்படுவதற்கும், மற்றும் அவரது சட்டத்தரணி அவரை அணுகி மற்றும் அவரது சார்பில் பிரதிநிதித்துவங்களை மேற்கொள்வதற்கும் (கட்டளையில் பிரதிப் பொலிஸ் மா அதிபரினால் குறிப்பிட்டவாறு நிபந்தனைகளுக்கு உட்பட்ட வகையிலும்) இந்தத் தடுத்து வைத்திருக்கப்படும் காலத்தின் போது முடியும் (ஒழுங்குவிதிகள் 17(3) மற்றும் (4)).

## தவறுகள்

### ஒழுங்குவிதி 12

சட்டமா அதிபரின் அபிப்பிராயத்தில், தவறுதல்கள் புரியப்பட்ட நேரத்தில் அல்லது அதனை அண்மித்த நேரத்தில் நிலவிய ஒரு குடியியல் அமைதியின்மை அல்லது இன ரீதியாகத் தூண்டப்பட்ட கலவரங்கள் என்பவற்றை முன்னெடுத்துச் செல்வதில் அல்லது அவை சம்பந்தமாக அல்லது அவற்றின் போது புரியப்பட்டவையாகக் காணப்பட்டால், இந்த ஒழுங்குவிதி தண்டனைச் சட்டக் கோவையிலுள்ள பல தவறுதல்களுக்கு கூடுதல் கடுமையான தண்டனைகளை அளிக்கின்றது (ஒழுங்குவிதி 12(3)). ஒழுங்குவிதி 12(1) இன் படி, ஆளெவரேனும் அவர்;

- ஆதனத்தை அழிக்கின்ற அல்லது சேதமாக்குகின்ற அல்லது அதன் பெறுமதியை அல்லது பயன்பாட்டைச் சிதைக்கின்றார் (அது பொது ஆதனமாக இருத்தல் வேண்டுமென குறித்துரைக்கப் படவில்லை),
- இறப்பு அல்லது காயத்தை ஏற்படுத்துவதற்கான காரணமாகிறார் அல்லது எத்தனிக்கிறார்,

- குற்றவியல் ரீதியான மிரட்டல் அல்லது தாக்குதலைப் புரிகின்றார்,
- வெற்றிடமாக விடப்பட்டுள்ள, பாதுகாக்கப்படாத, சேதமான அல்லது அழிவடைந்துள்ள ஏதேனும் வளாகங்களிலிருந்து திருட்டைப் புரிகின்றார்,
- ஒழுங்குவிதி 11(1) இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பாலியல் தவறுதல்களைப் புரிகின்றார்;
- திருட்டு, பணம் பறித்தல் அல்லது கொள்ளையடித்தல் புரிகின்றார்,
- தீங்கு மற்றும் சிதைவுகளின் சட்டவிரோத அகற்றல் தொடர்பாக தண்டனைச் சட்டக் கோவையின் 408 – 426 வரையான பிரிவுகளில் உள்ளடங்கியுள்ள தவறுதல்களைப் புரிகின்றார்,
- ஒழுங்குவிதி 11(1) இலுள்ள ஆதனம் தொடர்பான ஏதேனும் தவறுதல்களைப் புரிகின்றார் அல்லது அவ்வாறான வளாகத்திலிருந்து ஏதேனும் சொத்தை அகற்றுவதற்கு எத்தனிக்கின்றார்,
- தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 138 இன் நியதிகளுக்கமைவாக ஒரு சட்டவிரோத ஒன்றுகூடலின் பகுதியினராக இருக்கிறார்,

எனின் தவறுதலொன்றை அவர் புரிகிறார், என்பதுடன் மேல் நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டு ஆயுட்காலச் சிறைத்தண்டனை அல்லது 20 வருடங்களுக்கான ஒரு காலத்திற்கு சிறைத்தண்டனை அளிக்கப்பட முடியும். இந்தப் பிரிவு என்ன செய்கிறதெனில், தண்டனைச் சட்டக் கோவையில் ஏற்கனவே காணப்பட்ட தவறுதல்களுக்காக, தண்டனைச் சட்டக் கோவையில் ஏற்பாடளிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பை விட மிகவும் கடுமையான தண்டனைத் தீர்ப்பை இது வழங்குகிறது. உதாரணத்திற்கு, தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் (பிரிவு 433) குற்றவியல் அத்துமீறலிற்கான தண்டனை 3 மாதங்கள் வரைக்குமான ஒரு சிறைத்தண்டனை அல்லது ஆயிரம் ரூபாய் வரையான ஓர் அபராதம் என்றிருக்கையில், இந்த ஒழுங்குவிதிகளின் கீழ், தவறு புரிந்த ஒருவர் பதிலுக்கு ஆயுள் முழுவதிற்குமாக தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட முடியும்.

ஜனாதிபதி விக்கிரமசிங்க அவர்களின் ஒழுங்குவிதிகளில் உள்ளிணைக்கப்பட்டுள்ள தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவுகள் 408 – 426 [மேலே விபரிக்கப்பட்டுள்ளன] கீழான தவறுதல்கள் ஜனாதிபதி ராஜபக்சவின் ஒழுங்குவிதிகளில் காணப்படவில்லை என்பது முக்கியமானதாகும்.

மேலும், இப்பிரிவு ஒரு கட்டாயமாக குறைந்தபட்சம் இருபது வருடங்கள் தண்டனைத் தீர்ப்பை விதிப்பதற்கு முனைகிறது. எங்கள் சட்டத்தில் பெரும்பாலான தவறுதல்கள் ஒரு நீதவான் மீற முடியாத ஓர் அதிக பட்சமான தண்டனைத் தீர்ப்பை மட்டுமே ஏற்பாடளிப்பதானது, அவ்வாறான அதிகபட்ச காலத்திற்கும் குறைவான பொருத்தமான ஏதேனும் தண்டனைத் தீர்ப்பை அளிப்பதற்கான ஒரு தற்றுணிபை நீதவானிற்கு அளிக்கின்றது. எவ்வாறாயினும், இங்கு, தண்டனைத் தீர்ப்பு 'இருபது வருடங்கள் வரை' என வாசிப்பதில்லை. அவ்வாறு செய்வதற்கான எந்த அடிப்படையுமின்றி மற்றும் தேசியப் பாதுகாப்புக்கு எந்தத் தொடர்புமின்றி அத்தகைய கடுமையான தண்டனைகளை அனுமதிப்பது அவசரகால அதிகாரங்களின் ஒரு நியாயமற்ற அப்பியாசித்தலாக உள்ளது.

மேலும், தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 96, மற்றொரு ஆளுக்கு மரணத்தை ஏற்படுத்தும் சந்தர்ப்பங்களைக் கட்டமைக்கும் தனிப்பட்ட பாதுகாப்பு (தற்பாதுகாப்பு) குறித்து ஏற்பாடளிக்கிறது. ஆனாலும், ஒழுங்குவிதி 12(2) இந்தச் சந்தர்ப்பங்களை ஒழுங்குவிதி 12 இல் மேற்குறிப்பிட்ட ஒரு தவறுதல் புரியப்படுகின்ற எந்தவொரு சந்தர்ப்பத்திற்கும் நீட்டிக்கிறது. அதனால், தரப்பட்ட சந்தர்ப்பங்களின் போது ஒரு திருட்டு நடவடிக்கை புரியப்படுகையில், ஆதனத்தின் உரிமையாளர் திருட்டை மேற்கொள்ளும் ஆளிற்கு மரணத்தை ஏற்படுத்துவதற்கு முடியுமென்பதுடன் அதனைத் தற்பாதுகாப்பின் ஒரு நடவடிக்கை எனக் கோருவதற்கும் முடியும்.

## புதிய தவறுதல்கள்

ஒழுங்குவிதிகள் 13 - 16 மற்றும் 18 – 22, 25 மற்றும் 38

சாதாரண சட்டத்தின் ஒரு பகுதியாக அல்லாத பல ஏனைய தவறுதல்களை, ஒழுங்குவிதிகள் கொண்டமைந்துள்ளது. அவையாவன;

ஒழுங்குவிதி 13 – பொது உத்தியோகத்தர்கள், குடியரசின் சேவையின் ஈடுபட்டுள்ளவர்கள் அல்லது பொதுச் சேவைகளில் ஈடுபட்டுள்வர்களின மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்துவதற்கு முயற்சித்தல் (அவ்வாறான நபர்கள் அவர்களது கடமைகளை மீறுவதற்கு தூண்டுவித்தல் உட்பட).

ஒழுங்குவிதிகளில் முயற்சித்தல் என்பது எதனைக் குறிக்கிறது என்பது தெளிவாக இல்லாததினால், இந்த ஒழுங்குவிதி கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் (ஆர்ப்பாட்டம் செய்வதற்கான உரிமை) என்பவற்றை ஒடுக்குவதற்கு உபயோகிக்கப்பட முடியும்.

ஒழுங்குவிதி 14 – பொதுப் பாதுகாப்பு, பொது ஒழுங்கு அல்லது சமுதாய வாழ்வுக்கு அத்தியாவசியமான வழங்கல்களின் பேணுதலுக்கு பாதகமாகவுள்ள ஏதேனும் சுவரொட்டி, கையேடுகள் அல்லது துண்டுப்பிரசுரங்களை பகிரங்கமாகக் காட்சிப்படுத்தல் அல்லது விநியோகித்தல்.

இது, கருத்துத் தெரிவிப்பதற்கான சுதந்திரம், மற்றும் தகவலறிதலுக்கான உரிமை என்பவற்றின் ஒரு தெளிவான மீறுதலாகும். தகவல் உண்மையானதாகவும் மற்றும் சரியானதாகவும் இருந்தாலும் கூட, அரசுக்குப் பாதகமான ஏதேனும் தகவலின் பரப்புரைத்தலை ஒடுக்குவதற்கு இவ்வொழுங்குவிதி துஷ்பிரயோகிக்கப்பட முடியும்.

ஒழுங்குவிதி 15 – பொதுமக்கள் மத்தியில் பீதியை, பொது அமைதியின்மையை ஏற்படுத்தக்கூடிய அல்லது இன வன்முறையைத் தூண்டிவிடக் கூடிய ஏனும் வதந்தி அல்லது பொய்க்கூற்று அல்லது ஏதேனும் தகவல் அல்லது படவுரு அல்லது செய்தியை வாய்மொழி அல்லது எண்ணிம (டிஜிட்டல்) முறையில் (சமூக ஊடகத்திலுட்பட) தொடர்பாடுதல் அல்லது பரப்புதல்.

இந்தக் குறிப்பிட்ட ஒழுங்குவிதியின் வார்த்தைப் பிரயோகம் தெளிவானதாகவில்லை, ஆனாலும் பொய்யான கூற்று மட்டுமன்றி பொதுமக்கள் மத்தியில் பீதி அமைதியின்மை போன்றவற்றை உருவாக்கக் கூடுமான ஏதேனும் தகவல் அல்லது படவுரு என்பனவும் கூட இந்த ஒழுங்குவிதியின் பரப்பெல்லைக்குள் வருகின்றதாகக் காணப்படுகிறது. இது கருத்துத் தெரிவிப்பதற்கான சுதந்திரம் மற்றும் தகவலறிதலிற்கான உரிமை என்பவற்றின் ஒரு மீறலைக் குறிக்கிறது. 2005 இல் யுத்தத்தின் போது அவசரகால ஒழுங்குவிதிகள் நடைமுறையிலிருந்த போது வதந்திகள் மற்றும் பொய்க் கூற்றுகளைத் தடை செய்வதற்கான ஏற்பாடுகள் இருந்த வேளையிலும் கூட, உண்மைத் தகவல்களுக்கு அவை நீட்டித்திருக்கவில்லை. அதனால், 2022 ஒழுங்குவிதிகள் அவற்றின் பிரயோகத்தில் மிகவும் கடுமையானவையாக ஆக்குகின்றன.

ஒழுங்குவிதி 16 – ஓர் ஒழுங்குவிதியால் அல்லது ஓர் ஒழுங்குவிதியின் கீழான ஒரு கட்டளையினால் தேவைப்படுத்தப்பட்ட ஒரு பிரகடனம் அல்லது ஏனைய ஆவணத்தின் நியதிகளின் படி, தரப்பட்ட தகவல்களைத் தேவைப்படுத்தும் ஒரு ஒழுங்குவிதியின் கீழ் ஒரு வேண்டுகோள் அல்லது ஒரு கட்டளை மேற்கொள்ளப்படும் போது, அதற்கு போலியான அல்லது தவறான ஒரு கூற்றை மேற்கொள்ளுதல்.

ஒழுங்குவிதி 18 – வேறு ஆளொருவர் இருக்கின்ற வதிவிடம், வர்த்தகம் அல்லது ஏதேனும் இடத்தில் அமைதியை மீறுவதற்கு இடமளிக்கும் ஒரு வகையில் அங்கிருக்கும் எவரேனும் ஆளை மிரட்டுவது போன்று அல்லது அவ்வாள் அந்த இடத்தை அணுகுவதற்கு அல்லது அங்கிருந்து வெளிப் போவதைத் தடை செய்யும் ஒரு விதத்தில் அந்த வீடு அல்லது இடத்தில் பிரசன்னமாக நிற்றல் அல்லது அவற்றிற்கு அண்மையில் காத்திருத்தல்.

இங்கு மிரட்டுதல் என்பது, நபர் ஒருவரிற்கு அல்லது அவரது குடும்ப உறுப்பினரொருவரிற்கு ஊறு (ஆளொருவரிற்கு அல்லது அவரது வியாபாரம், தொழில், வேலைவாய்ப்பு, அல்லது வருமானத்திற்கான வேறு மூலம் என்பவற்றுக்கு ஒரு தவறான நடவடிக்கை மூலம் ஏற்படுத்தப்படும் ஊறு அல்லது சேதம் உள்ளடங்கலாக) அல்லது அவர்களின் ஆதனத்திற்கு சேதம் ஏற்படுகின்ற ஒரு நியாயமான அச்சத்தை உருவாக்குதல் என வரையறுக்கப்படுகிறது. இது பரந்ததானவொரு வரைவிலக்கணமாகும் என்பதுடன் அது ஆர்ப்பாட்டம் செய்வதற்கான உரிமை, கருத்துத் தெரிவிப்பதற்கான சுதந்திரம், மற்றும் நடமாட்டத்திற்கான சுதந்திரம் என்பவற்றை நசுக்குவதற்கும் உபயோகிக்கப்பட முடியும்.

ஒழுங்குவிதி 20 – சட்டபூர்வ அதிகாரமின்றி பொது வீதி, பாலம், ஏதேனும் பொது வீதியின் சிறுபாலம், ஏதேனும் ரயில்பாதை அல்லது ஒரு பொதுப் போக்குவரத்து வாகனம் என்பவற்றுக்கு ஏதேனும் தடையை அல்லது சேதத்தை ஏற்படுத்துதலைக் குறிக்கிறது.

மீண்டும், இந்த ஒழுங்குவிதி, ஒன்றிணைதலுக்கான சுதந்திரத்திற்கு பாதகமான பயன்களைக் கொண்டிருக்க முடியுமென்பதுடன் ஆர்ப்பாட்டம் செய்வதற்கான உரிமையையும் பாதிக்கிறது.

ஒழுங்குவிதி 21 – ஒழுங்குவிதிகளின் கீழான தவறொன்றைப் புரிவதற்கு எத்தனிக்கின்ற, உதவுகின்ற மற்றும் உடந்தையாக இருக்கின்ற, அல்லது புரிவதற்குச் சதிசெய்கின்றமையும் கூட தவறுகளில் ஒன்றாக ஆக்கப்பட்டுள்ளது.

ஒழுங்குவிதி 22 - இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் தவறொன்றை அவர்கள் புரிந்துள்ளார்கள் என்பதை அறிந்து கொண்டும் அல்லது அதனை நம்புவதற்கு நியாயமான காரணங்களைக் கொண்டிருந்தும் குறித்த தவறுக்காக நபரொருவரை கைது செய்தல், விசாரணை அல்லது தண்டித்தல் என்பவற்றைத் தடுத்தல், இடைஞ்சல் செய்தல் அல்லது குறுக்கீடு செய்யும் நோக்கத்துடன் அந்த ஆளொருவருக்கு உதவி அளித்தல்.

ஒழுங்குவிதி 25 – ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான ஒரு தவறுதலைப் புரிவதற்கான ஒரு தயார் செய்தலின் ஓர் எத்தனித்தல், அல்லது புரிதல் பற்றிய ஓர் உள்நோக்கம் பற்றி ஆளொருவர் அறியவருவாராயின், அது பற்றி அவர் அண்மையிலுள்ள கிராம சேவகர் அல்லது அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரிக்கு தகவலளித்தல் வேண்டும். அவ்வாறு செய்யத் தவறுவது ஒரு குற்றமாக்கப்பட்டுள்ளது.

இந்த ஒழுங்குவிதி, குற்றவியல் நடைமுறைக் கோவையின் (CCP) பிரிவு 21 இனை ஒத்தது, எவ்வாறாயினும், குற்றவியல் நடைமுறைக் கோவையின் ஏற்பாடுகள் தண்டனைச் சட்டக் கோவைத் தவறுதல்களுக்கு மட்டுமே பிரயோகமாகும். மேலுள்ள ஒழுங்குவிதி, தற்போது நிலவும் கண்காணித்தல் மற்றும் மிரட்டுதலளிக்கும் தன்மையான சூழ்நிலைக்குப் பங்களிக்கின்றது.

ஒழுங்குவிதி 38 - தகுதிவாய்ந்த ஓர் அதிகாரியால் அல்லது அவர் சார்பில் வேண்டுகோள் வைக்கப்படும் போது, தேசிய பாதுகாப்பு நலன்களுக்காக அல்லது பொது ஒழுங்கைப் பேணுவதற்காக அல்லது ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் நோக்கங்களுக்காக தகவல்களைப் பெறுவது அவசியமானது அல்லது உசிதமானது அல்லது பொருளைச் சோதிப்பதற்கு வேண்டுகோளை மேற்கொள்ளும் அதிகாரி அல்லது ஆளொருவர் அபிப்பிராயப்படு போது அதற்கான ஏதேனும் பொருளை (பதிவுப் புத்தகங்கள், கணக்குகள், ஆவணங்கள் உட்பட) சமர்ப்பிக்கத் தவறுதல்.

இந்த ஒழுங்குவிதியின் கீழான ஒரு தவறுதல் ஒரு குழு ஆட்களால் புரியப்பட்டிருப்பின், அது கூட்டிணைக்கப்பட்ட ஓர் அமைப்பாயின் அதன் அனைத்துப் பணிப்பாளர்களும், அல்லது அது ஒரு குழுமமாக இருப்பின் அதன் அனைத்துப் பங்காளர்களும், அத்தவறு அவர்களது அறிவுக்கு உட்பட்ட வகையிலல்லாது புரியப்பட்டது என அவர்கள் எண்பித்தாலன்றி, தவறுதல்களுக்கான குற்றவாளிகளாகக் கருதப்படுதல் வேண்டும் (ஒழுங்குவிதி.23).

ஓர் ஒழுங்குவிதியுடன் அல்லது அதன் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் கட்டளைக்கு/பணிப்புரைக்கு இணங்கத் தவறும் நபரெவரும் தவறொன்றுக்கான குற்றவாளியாதல் வேண்டுமென்பதோடு, ஜூரர் ஒருவர் இல்லாத மேல் நீதிமன்றின் முன்னராக, அல்லது ஒரு நீதவான் நீதிமன்றத்தின் முன்பாக விளங்கப்படல் வேண்டுமென்பதோடு, அவருக்கு 3 மாதங்களிலிருந்து 5 வருடங்கள் வரையான கடூழியச் சிறைத்தண்டனை, ரூ.500. மற்றும் ரூ.5000 இடையிலான ஒரு அபராதத்திற்கும் தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட முடியும்.

ஒழுங்குவிதிகளின் கீழ் ஒரு தவறுதலிற்கு நபரொருவர் குற்றத் தீர்ப்பளிக்கப்படும் போது குற்றவியல் நடைமுறைக் கோவையின் பிரிவு 306(2) பிரயோகமாகாது என ஒழுங்கவிதி 12(3) ஏற்பாடளிக்கிறது. குற்றம் சாட்டப்பட்ட நபரின் 'நடத்தை, முன்னிகழ்வுகள், வயது, ஆரோக்கியம், அல்லது உள நிலை, அல்லது தவறுதலின் முக்கியமற்ற தன்மை, அல்லது தவறுதல் புரியப்பட்டதின் கீழான தணிக்கும் சூழ்நிலை

என்பவற்றுக்கு கவனமளித்து', தவறு புரிந்தவரை நன்னடத்தை மீதான அவர்களது அங்கீகாரம் மீது நிபந்தனையில் விடுவிப்பதற்கு (இருப்பினும் நிபந்தனையிலான விடுவித்தல் நேரத்திலிருந்து ஒரு 3 வருட காலத்திற்குள் அவசியமாயின் தவறுதலுக்காக தண்டனைத் தீரப்பளிக்கப்படுவதற்கு பொறுப்பளிக்கப்படக் கூடியவர்) ஒரு நீதிபதியை இந்தப் பிரிவு அனுமதிக்கிறது.

வழக்கினை விசாரிக்கும் நீதிபதியே மிகவும் நியாயமான மற்றும் ஒப்புரவானதாக இருக்கக்கூடியதான தண்டனைத் தீர்ப்பின் தன்மையை தீர்மானிப்பதற்கான தற்றுணிபைக் கொண்டிருப்பதால், குற்றவியல் நடைமுறைக் கோவையின் இந்தப் பிரிவினைத் தவிர்த்தமை, நீதித்துறைத் தற்றுணிபின் ஒரு நீக்குதலாகவுள்ளது.

## அத்தியாவசிய சேவைகள்

ஒழுங்குவிதிகள் 8 - 10

ஒழுங்குவிதிகளின் கீழ், அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தலைமையதிபதியை [CGES], ஜனாதிபதி நியமிப்பதற்கு முடியும். அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தலைமையதிபதி, அத்தியாவசிய சேவைகளின் வழங்கல் மற்றும் பேணுதல் தொடர்பான எல்லா நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்து நிறைவேற்றும் பணிகளுக்குப் பொறுப்பானவராவர் (ஒழுங்குவிதி. 8(1)). ஒழுங்குவிதிகளின் கீழ் தங்களது அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தலைமையதிபதி தனக்கு அளிக்கப்பட்ட தத்துவத்தை கடமைகளை மேற்கொள்ளும் வேறு நபர் எவரேனுக்கும் பிரயோகிப்பதற்கு இயலுமாகவிருக்கும். அத்தோடு, ஒதுக்கப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தலைமையதிபதி தனது தத்துவங்களை கையளிப்பதற்கும் இயலுமாகவிருக்கும் (ஒழுங்குவிதிகள். 8(3) மற்றும் (5)).

பொது ஒழுங்கைப் பேணுதல் மற்றும் பாதுகாத்தலுக்கும் மற்றும் சமுதாய வாழ்வுக்கு அத்தியாவசியமான வழங்கல்கள் மற்றும் சேவைகளின் பேணுதலுக்கும் மிகவும் அவசியமானதாகத் தோன்றும், எந்தவொரு சேவையையும் அத்தியாவசிய சேவையாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை மூலம் ஜனாதிபதி பிரகடனப்படுத்தலாம் (ஒழுங்குவிதி. 9(1)). ஓர் அத்தியாவசிய சேவையாக சேவையொன்று பிரகடனப் படுத்தப்பட்ட பின்;

அச் சேவையில் ஈடுபட்டுள்ள நபரொருவர் இடையில் வேலையில் ஈடுபடுவதற்குத் தவறின் அல்லது மறுப்பின், வேலைக்கு வருகை தர மறுப்பின் அல்லது வேலைக்கு வருகை தராதிருப்பின், அல்லது வேலை அவர்களது சாதாரண வேலை நேரங்களுக்கு வெளியானவையாக இருந்தாலும் கூட, சேவையின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக அவர்களது கடமைகளை ஆற்றாதிருப்பின் அல்லது ஆற்றுவதற்குத் தவறின், அவ்வாட்கள் சேவையிலிருந்து முடிவுறுத்தப்பட்டுள்ளனர் அல்லது சேவையிலிருந்து விலகியவர்களாகக் கருதப்படுவார்கள். மேலும், ஒரு வேலை நிறுத்தம் அல்லது ஏற்பாடு செய்யப்பட்ட செயற்பாட்டுக்கு உடந்தை காரணமாக அவர்களின் வேலைக்கு வருகை தராமை அல்லது வேலை செய்வதற்கு மறுத்தமை, கருதப்படின் தவறொன்றுக்காக அவர்கள் குற்றவாளிகளாக காணப்படுவர்.

மேலும், ஏனைய விடயங்களிடையே அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்தப்பட்ட சேவையின் பேணுதலுக்கு அல்லது ஆளொருவர் தங்களது வேலைத்தலத்திற்குப் போகின்றதை முட்டுக்கட்டையிடுகின்ற, தடை செய்கின்ற, தாமதிக்கின்ற அல்லது தடுக்கின்ற அல்லது ஆளொருவர் கடமைக்கு சமுகம் அளிக்காதிருப்பதற்கு, சேவை விலகுவதற்கு (அச்சேவையை விட்டு அவர்கள் உண்மையில் விலகாதிருப்பினும் கூட) அல்லது நிகரான அல்லது சமாந்தரமான சேவையை ஸ்தாபிப்பதற்கு (ஓர் அரசாங்கத் திணைக்களத்தில் அவர்கள் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தாலும் கூட) ஏவுகின்ற, தூண்டுகின்ற அல்லது ஊக்குவிக்கின்ற, அல்லது தொழில் வாய்ப்பின் ஏற்றுக்கொள்தலை அல்லது அளித்தலைத் தடுக்கின்ற, எவரேனுமாள் 3 வருடங்கள் வரையிலுமான ஒரு காலத்திற்கு தவறொன்றின் குற்றத்திற்காகத் தண்டனைக்குரியவராவர். இதற்கான ஊக்குவித்தல் அல்லது வலியுறுத்தல் ஏதேனும் செயல், பேச்சு அல்லது எழுத்து மூலமானதாக இருப்பினும் கூட இது பிரயோகமாகும்.

‘ஏவுதல்’, ‘தூண்டுதல்’ அல்லது ‘ஊக்குவித்தல்’ என்பவற்றின் தேவைப்பாடுகளைத் திருப்திப்படுத்துவதற்கான வரம்புநிலை எதுவென்பது தெளிவற்றதாக உள்ளமை, கரிசனைகளை ஏற்படுத்துகின்றது. ஓர் அத்தியாவசிய சேவையின் செயற்பாட்டை விமர்சிக்கும் ஓர் உரை அல்லது கட்டுரை கூட அதன் ஆசிரியர் தவறொன்றுக்கு குற்றவாளியாகுதலை ஏற்படுத்தலாம்.

தண்டனைத் தீர்ப்புக்கு மேலதிகமாக, ஒழுங்குவிதி 9 இலுள்ள தவறுதல்களுக்கு குற்றவாளியாக ஆளெவரேனும் காணப்படுமிடத்து, அவ்வாளின் அசையும் அல்லது அசையாச் சொத்துகள் அனைத்தும் அந்தக் குற்றத் தீர்ப்பின் தன்மைப்படி குடியரசிற்கு இழக்கப்பட்டனவாகக் கருதப்படல் வேண்டுமென நீதிமன்றம் கட்டளைப்படுத்தலாம் (இந்த ஒழுங்குவிதிகள் நடைமுறைக்கு வந்த பின்னர் அவை அகற்றப்பட்டிருந்தாலும் கூட) (ஒழுங்குவிதி. 9(5)).

மேலும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் சம்பந்தப்பட்ட சேவைக்குப் பொறுப்பான அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் ‘அவசியமானது எனக் கருதப்படும் போதெல்லாம், தேவைப்படுத்தப்பட்ட வகையில்’ ஆளொருவர் வேலை செய்கின்ற சேவை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்தப்பட முடியும் (ஒழுங்குவிதி. 9(6)).

ஏதேனும் அத்தியாவசிய சேவை தொடர்பில் ஒரு தகுதி வாய்ந்த அதிகாரியை ஜனாதிபதி நியமிப்பதற்கும் முடியும், மற்றும் அத்தியாவசிய சேவையைப் பேணுவதற்காக உபயோகிக்கப்படும் ஏதேனும் இடம் அல்லது வளாகத்தில் அனுமதியின்றி, நபரெவரும் உள்நுழைவதற்கோ அல்லது அங்கு தங்கியிருப்பதற்கோ கூடாது என அந்த தகுதிவாய்ந்த அதிகாரி உத்தரவிடுவதற்கும் முடியும். ஆளொருவர் இந்த உத்தரவிற்கு முரண்படின், அவர் இந்த இடம் அல்லது வளாகத்திலிருந்து பொலிசாரினால், ஆயுதப்படைகளினால் அல்லது அவ்வாறு செயற்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் நபரினால் அகற்றப்பட முடியும்.

## புலனாய்வுகள் மற்றும் விளக்கங்கள்

ஒழுங்குவிதிகள் 25 - 35

ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான தவறொன்றைப் புலனாய்வு செய்வதற்கு ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் அல்லது அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட நபரொருவர், வேறேதேனும் சட்டத்தில் ஏதேனும் முரணாக இருப்பினும் கூட, ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அல்லது கட்டுக்காவிலில் வைத்திருக்கப்படும் ஒருநபர் உட்பட, எந்தவொரு ஆளையும் விசாரிப்பதற்கான உரிமையையும் மற்றும் அவ்விசாரணைக் காலத்தின் போது அப்புலனாய்வின் நோக்கத்திற்காக இடத்திற்கிடம் அவ்வாளை கூட்டிச் செல்வதற்கும் முடியும் (ஒழுங்குவிதி.28(1)). மேற்சொன்ன ஒழுங்குவிதி “முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர்” யாராக இருக்க முடியுமென்பதை விளக்காத வேளையில், ஒழுங்குவிதி 37(1) இற்கமைய, இராணுவத்தின் கட்டளை அதிகாரி, கடற்படையின் கட்டளை அதிகாரி அல்லது விமானப் படைக் கட்டளை அதிகாரி ஆகியோரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு யாரேனும் உத்தியோகத்தர் தடுத்து வைத்திருப்பவர்களை விசாரணை செய்வதற்கு முடியுமென்பதுடன் அவ்வாறு கேள்வி கேட்கப்படும் ஆள் கேட்கப்படும் கேள்விகளுக்கு விடையளிப்பது அவரது கடமையாதலும் வேண்டும்.

மேலும், ஆளெவரேனும் தடுத்து வைத்திருக்கப்படுகையில் அல்லது கட்டுக்காவலில் உள்ள போது, அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் தவறொன்றைப் புலனாய்வு செய்யும் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் அவ்வாறான புலனாய்வுகளின் நோக்கங்களுக்காக அவ்வாறான ஆளெவரேனையும் நியாயமான நேரங்களின் போது அணுகுவதற்கான ஒரு உரிமையைக் கொண்டிருப்பார் (ஒழுங்குவிதி 29). இவ்வாறான ஏற்பாடுகள் தண்டனைச் சட்டக் கோவைக் குற்றங்கள் தொடர்பாக குற்றவியல் நடைமுறைக் கோவையின் பிரிவு 115(4) இல் உள்ளடங்கியுள்ளன. எனினும், ஒழுங்குவிதி 35 இன்படி, குற்றவியல் நடைமுறைக் கோவையின் அத்தியாயம் XI (பிரிவு 115 உட்பட, பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் விசாரணையாளர்களின் மற்றும் புலனாய்விற்கான அவர்களின் தத்துவங்கள் தொடர்பான தகவல்களின் ஏற்பாடுகளை விபரிக்கும்) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதிளின் கீழ் நடத்தப்படும் ஏதேனும் புலனாய்வுகளுக்கு பிரயோகமாகாது.

குற்றவியல் நடைமுறைக் கோவையின் பிரிவு 115 (4) இன் கீழ், விசாரணைக்காக குற்றஞ் சாட்டப்பட்டவரை ஒரு இடத்திலிருந்து இன்னுமொரு இடத்திற்கு கூட்டிச் செல்வதற்கும், மற்றும் நியாயமான நேரங்களில் அணுகுவதற்குமான உரிமையைக் கொண்டிருப்பதற்கும் நீதிமன்ற அனுமதி தேவை. அவ்வாறான நீதித்துறை அனுமதியின் தேவைப்பாடு ஒழுங்குவிதிகள் 28 மற்றும் 29 இல் உள்ளடக்கப்படவில்லை. கட்டுக்காவல் மற்றும் தடுப்பு நிலையங்களிலான சித்திரவதை தொடர்பாக பல்வேறு குற்றச்சாட்டுகள் பொலிஸிற்கு எதிராக எழுப்பப்பட்டுள்ள ஒரு பின்னணியில், விசேடமாக நீதிமன்றக் கண்காணிப்பு அற்ற நிலையில், மேற்சொன்ன ஒழுங்குவிதிகளின் நடைமுறைப்படுத்தல், பெரும் கரிசனைக்குரிய ஓர் ஏதுவாகிறது.

ஒழுங்குவிதி 37(2) அவ்வாறான ஏனைய உத்தியோகத்தர்கள் அவ்வாறான நபரொருவரை தடுப்புக் காவல் அல்லது கட்டுக்காவலுள்ள ஏதேனும் இடத்திலிருந்து அகற்றுவதற்கும் வினவுதலுக்காக அல்லது ‘‘அவ்வாறான வினவுதலுடன் தொடர்புடையதான வேறு ஏதேனும் நோக்கத்திற்காக’’ ஒரே தடவையில் ஏழு நாட்களை மிஞ்சாத ஒரு காலப்பகுதிக்கு அவ்வாளை அந்த உத்தியோகத்தரின் தற்காலிகக் கட்டுக்காவலில் வைத்திருப்பதற்கும் அனுமதிக்கிறது. இந்தத் தெளிவற்ற வார்த்தைகளிலான ஏற்பாடுகள் பரந்த மாதிரி அர்த்தப்படுத்தப்பட முடியுமென்பதுடன், எதேச்சதிகரமான கைது மற்றும் சித்திரவதை என்பவற்றிலிருந்தான சுதந்திரத்தை மீறுவதற்கு மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள உரிய உத்தரவாதச் செயன்முறைகளுக்கான அணுகுதலை மட்டுப்படுத்துவதற்கு, இந்த ஒழுங்குவிதிகளின் துஷ்பிரயோகித்தல் குறித்து கரிசனைகளை எழுப்புகிறது.

மேலும், ஏதேனும் ஒழுங்குவிதியின் கீழான தவறொன்றைப் புலனாய்வு செய்கின்ற, ஒரு பொலிஸ் உத்தியோகத்தருக்கு அல்லது முறையாக அதிகாரமளிக்கப்பட்ட மற்றொரு ஆளுக்கு, சகல உதவிகளை வழங்குவதற்கும் மற்றும் புலனாய்வின் போது அவர்களிடம் வினவப்பட்ட அனைத்துக் கேள்விகளுக்கும் உண்மையான பதிலளிப்பதற்குமான கடப்பாடு ஒவ்வொரு ஆட்களின் மீது இடப்பட்டுள்ளது. அத்துடன் வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், புலனாய்வின் விடயதானம் சம்பந்தப்பட்ட, ஏதேனும் ஆவணத்தின் உள்ளடக்கங்கள் உட்பட சகல தகவல்களும், அவ்வாவணத்தின் உள்ளடக்கம் பற்றி அவ்வாள் பெற்றுக் கொண்ட தகவல் அல்லது புரிந்து கொள்தலின் அளவைக் கவனத்தில் கொள்ளாது முழுமையாக வெளியிடப்படல் வேண்டும் (ஒழுங்குவிதி. 28(2)).

ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான தவறொன்றைப் புலனாய்வு செய்கின்ற பொலிஸ் உத்தியோகத்தர் அல்லது புலனாய்வு செய்வதற்கு முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளிடம் புலனாய்வின் போது கேள்வி கேட்கப்படும் ஆள் ஏதேனும் பொருளை அல்லது அவ்வாளின் பாதுகாப்பு அல்லது உடமையிலுள்ள ஒரு ஆவணம் உட்பட வேறு பண்டத்தை, கையளிப்பதற்கு பணிக்கப்படும் போது அந்தப் பொலிஸ் உத்தியோகத்தர் அல்லது முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளிடம் அவற்றைக் கையளிப்பதற்கான கடப்பாடும் கேள்வி கேட்கப்படும் ஆளின் மீது இடப்பட்டள்ளது (ஒழுங்குவிதி. 28(3)). இந்த ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கு முரண்படுகின்ற அல்லது அதன்கீழ் விதிக்கப்பட்ட ஏதேனும் கடப்பாடுகளை மீறுகின்ற ஆளெவெரேனும் இந்த ஒழுங்குவிதிகளின் 49 24 ஆவது ஒழுங்குவிதியின் கீழ் தவறொன்றைப் புரிந்தவராகிறார் (ஒழுங்குவிதி. 28(4)).

இந்த ஒழுங்குவிதியில் சிறப்புரிமைத் தொடர்பாடல் (சட்டத்தரணி-கட்சிக்காரர்/வைத்தியர்-நோயாளி) தொடர்பாக இடப்பட்டுள்ள கடப்பாடுகளின் பயனுறுதி பற்றியும் கரிசனைகள் உள்ளன.

ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் ஒரு பொலிஸ் உத்தியோகத்தரின் தத்துவங்கள், வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் அவரது தத்துவங்களை விட மேலதிகமானவையாக இருப்பதற்கும் மற்றும் அதை விடக் குறைந்தவையாக இல்லாதிருப்பதற்கும் ஒழுங்குவிதி 30 ஏற்பாடளிக்கிறது. இராணுவமயமாக்கலும் பாதுகாப்புமயமாக்கலும் ஏற்கனவே பரவலாக மேற்கொள்ளப்பட்டு வரும் எச்சரிக்கையான பின்னணியிலும், அதே போன்று பொலிஸ் துஷ்பிரயோகங்கள் ஆவணப்படுத்தப்பட்டு மற்றும் அண்மைய மாதங்களில் அமைதிவழி ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக மிதமிஞ்சிய பலப் பிரயோகம் உபயோகிக்கப்பட்ட நிலையில், அவசரகால ஒழுங்குவிதிகள் பொலிஸிற்கு மேலும் தத்துவங்கள் மற்றும் நடவடிக்கைகளுக்கான சுதந்திரம் என்பவற்றை அனுமதிக்கிறது.

ஒழுங்குவிதி 34(2), இந்த ஒழுங்குவிதிகளின் நியதிகளின் படி தவறொன்றைப் புரிந்ததாக சந்தேகிக்கப்படும் அல்லது குற்றஞ்சாட்டப்படும் ஆளெவரும் விதிவிலக்கான சந்தர்ப்ப சூழ்நிலையின் கீழன்றி பிணையில் செல்வதற்கு அனுமதிக்கலாகாது என ஏற்பாடளிக்கிறது.

## சட்டமா அதிபரின் வகிபாகம்

அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ், அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ், ஆட்களால் புரியப்பட்டதாக குற்றஞ்சாட்டப்படும் தவறுதல்கள் எந்த நீதிமன்றத்தில் தீர்மானிக்கப்படல் வேண்டுமென சட்டமா அதிபர் தீர்மானிக்கலாம். அங்கு, செயல்கள் அல்லது புறக்கணித்தல்களின் பின்விளைவாக கட்டமைக்கப்படும், அல்லது அதிலிருந்து தோன்றும் அவ்வாறான தவறுதல்கள், அல்லது மேற்கொள்ளப்பட்ட அல்லது மேற்கொள்ளப்படத் தவறிய, நேரடியான அல்லது மறைமுகமான, அப்பியாசித்தல் அல்லது செயற்படுத்தல், அல்லது கருதப்பட்ட அப்பியாசித்தல் அல்லது செயற்படுத்தல், அவ்வாறான ஒழுங்குவிதியின் கீழான ஏதேனும் தத்துவம் அல்லது கடப்பாடு, என்பன விசாரிக்கப்படும் அல்லது விளங்கப்படும். அவ்வாறான நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் அவ்வாறான தவறுதல்கள் புரியப்பட்டதாயின், அவ்வாறான நீதிமன்றமே நியாயாதிக்கம் கொண்ட நீதிமன்றமாக அமையும் (ஒழுங்குவிதி. 32).

ஆகையால், சட்டமா அதிபரின் எழுத்து மூலமான அனுமதி நீதவான் நீதிமன்றில் வழக்குத் தொடர்வதற்கான ஒரு தேவைப்பாடாகும். ஆனால், அவ்வாறான ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதிக்கு எதிரான ஏதேனும் தவறுதல் தொடர்பில் இந்த ஏற்பாடு பிரயோகமாகாது என ஜனாதிபதி கட்டளை மூலம் அறிவிக்கலாம். கட்டளையில் குறித்துரைக்கப்பட்டவாறும் அதற்கமைவாகவும், அக்கட்டளை வலுவில் இருக்கும் வரைக்கும், அந்தப் பந்தி ஏதேனும் அவ்வாறான ஏதேனும் தவறுதலுக்கு பிரயோகமாகாது (ஒழுங்குவிதி. 33).

## நானாவிதமானவை

### ஒழுங்குவிதி 36

உபபிரிவு (1) இன் படி, இந்த ஒழுங்குவிதி தொடர்ந்து வலுவில் இருக்கும் போது, ஒரு சார்ஜன்ட் தரத்திற்கும் குறையாத பதவியிலுள்ள எவரேனும் பொலிஸ் உத்தியோகத்தர், ஒரு கோப்ரல் தரத்திற்கும் குறையாத பதவியிலுள்ள எவரேனும் இலங்கைத் தரைப்படை உறுப்பினர், தலைமைக் கடலோடித் தரத்திற்கும் குறையாத பதவியிலுள்ள எவரேனும் இலங்கைக் கடற்படை உறுப்பினர், அல்லது ஒரு கோப்ரல் தரத்திற்கும் குறையாத பதவியிலுள்ள எவரேனும் இலங்கை விமானப்படை உறுப்பினர், ஏதேனும் பொது வீதி, புகையிரதப் பாதை, பொதுப் பூங்கா, பொதுப் பொழுதுபோக்கு மைதானம் அல்லது பொது மைதானம், கடற்கரை என்பவற்றில் அல்லது அவற்றுக்கு அண்மையில் அல்லது பொதுக் கட்டட அல்லது அரசாங்கத் திணைக்கள வளாகங்கள் என்பவற்றில் நிற்கும் எவரேனும் ஆள் அல்லது ஆட்களை அந்த இடங்களிலிருந்து அகலுவதற்கு கட்டளையிடலாம் என்பதுடன் அக்கட்டளைக்கு இணங்குவது அவ்வாறான ஆள் அல்லது அவ்வாறான ஒவ்வொரு ஆட்களினதும் கடமையாகும்.

மேலும், உபபிரிவு (2) இற்கமைய, எவரேனும் ஆள்/ஆட்கள் அக்கட்டளைக்கு இணங்காத சந்தர்ப்பத்தில், அவ்வுத்தியோகத்தர் ஆயுத பலம் உட்பட பலப் பிரயோகம் மூலம் கட்டளைக்கு பயன் கொடுப்பதற்கு முன்வரலாம் என்பதுடன் அது அவ்வாறான ஆள் அகற்றப்படுவதை அல்லது கைது செய்யப்பட்டு மற்றும் தடுத்து வைக்கப்படுவதனையும் ஏற்படுத்தலாம்.

இந்த ஒழுங்குவிதி நடமாடுவதற்கான சுதந்திரம், ஒன்றுகூடும் மற்றும் இணைவதற்கான சுதந்திரம் என்பவற்றை மட்டுப்படுத்தலாமெனும் வேளையில் ஒழுங்குவிதிகளாக முழுமையாகப் பார்க்கையில் பரந்த அதிகாரங்களுக்கு பலம் சேர்ப்பதாகவும் மற்றும் ஆயுதப்படைகளிற்கு வழிவிடுதலை அளிப்பதாகவும் உள்ளது. அத்தகைய கட்டளைகளை வலியுறுத்தும் முகமாக மிதமிஞ்சிய பலத்தை உபயோகிப்பதற்கு வழியளிக்கப்படுவது பற்றியும் கூட ஒழுங்குவிதி கரிசனைகளை எழுப்புகிறது.

உபபிரிவு (3) இன் படி, இந்த ஒழுங்குவிதியின் தொடர்ந்து வலுவுள்ளபோது, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறைக் கோவையின் பிரிவுகள் 306 (1), (2) மற்றும் (4) என்பவை, ஏதேனும் அவசரகால ஒழங்குவிதியின் கீழான ஏதேனும் தவறுதலுக்காக குற்றஞ் சாட்டப்பட்ட, அல்லது குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட ஆளெவரேனுக்கும் அல்லது அவர் தொடர்பாகப் பிரயோகமாகாது. மேற்சொன்ன ஏற்பாட்டின் ஒரு விளைவாக, "குற்றம் சாட்டப்பட்ட ஆளின் "நடத்தை, முன்னிகழ்வுகள், வயது, ஆரோக்கியம், அல்லது உள நிலை, அல்லது தவறுதலின் முக்கியமற்ற தன்மை, அல்லது தவறுதல் புரியப்பட்டதின் கீழான தணிக்கும் சூழ்நிலை என்பவற்றுக்கு கவனமளித்து..." நீதிமன்றத்தாலான நிபந்தனை விடுவிப்பு, இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் தவறொன்றின் குற்றஞ்சாட்டப்பட்ட, அல்லது குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட ஆட்களுக்கு வழங்கப்பட மாட்டாது.

## ஒழுங்குவிதி 39

இது, ஆயுதப் படைகளின் உறுப்பினர்களை மோட்டார் வாகனச் சட்டத்தின் சில ஏற்பாடுகளிலிருந்து விதிவிலக்களிக்கிறது..

## ஒழுங்குவிதி 40

(1) ஜனாதிபதி, கட்டளை மூலம், கட்டளையில் குறித்துரைக்கப்பட்டவாறு இலங்கையின் ஏதேனும் இடப்பரப்பிற்கான ஒருங்கிணைப்பு உத்தியோகத்தராக இருப்பதற்கு பெயரினால் அல்லது பதவியினால் எவரேனும் ஆளை நியமிக்கலாம்.

(2) இலங்கையின் ஏதேனும் இடப்பரப்பிற்காக கட்டளை மூலம் ஜனாதிபதியால் ஒரு ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் நியமிக்கப்படுமிடத்து, அவ்வுத்தியோகத்தர் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் அல்லது வேறுவகையில் ஓர் அரசாங்க அதிபருக்கு அளிக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட சகல தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை அவ்விடப்பரப்பில் அப்பியாசித்தலும், செயற்படுத்தலும் மற்றும் நிறைவேற்றுதலும் வேண்டும் என்பதுடன் அந்த நோக்கத்திற்காக அவ்விடப்பரப்பு விடயம் தொடர்பான அதன் விண்ணப்பத்தில் ஒவ்வொரு குறிப்பிடுதலும் அத்தகைய ஒருங்கிணைப்பு உத்தியோகத்தருக்கு ஒரு குறிப்பிடுதலாக உருவாக்கப்படுதல் வேண்டும்.

(3) ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் மீது மேற்பார்வையைப் பிரயோகிப்பதற்கான ஒருங்கிணைப்புப் பிரதானியாக இருப்பதற்கு, ஜனாதிபதி கட்டளை மூலம், எவரேனும் ஆளை, பெயரினால் அல்லது பதவியினால் நியமிக்கலாம்.

(4) இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் ஒருங்கிணைப்புப் பிரதானி அவரது கடமைகளை நிறைவேற்றுவதற்கு உதவுதற்கு அவசியமாக இருக்கக்கூடியவாறான பிரதிப் பிரதான ஒருங்கிணைப்பாளர்களை ஜனாதிபதி பெயரினால் அல்லது பதவியினால் நியமிக்கலாம்.